# முரசொலி

பக்கங்கள் நான்கு  விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 201 ஆங்கீரச ஆனி 01 (15.06.1992) திங்கள்


## வீட்டில் இருந்தவர்கள் வெளியேற முடியவில்லை

கொக்கன்சலட்டிப் பகுதியில் வீட்டில் தங்கியிருந்த இராசரத்தினத்துக்கும் அவரது சகோதரி வாசாம்பிகைக்கும் என்ன நடந்தது எனத் தெரியவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இதேபோல கருசம்பனையில் கிளி திரும்பிவரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் படையினரிடம் சிக்கியிருக்கலாம் எனவும் கடந்த வாரம் முதல் இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் வீடு பார்க்கச் சென்ற பலர் படையினரால் சுடப்பட்டு மரணமானதும் குறிப்பிடத்தக்கது. 22

# விமானப்படைமீது தாக்குதல்

# நான்கு படையினர் பலி

## திருமலையில் சம்பவம்

திருகோணமலையில் நேற்று விமானப்படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 4 விமானப்படையினர் பலியாகினர் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன:

நேற்றுக்காலை 5 40 மணியளவில் சின்னியாவில் உள்ள வெங்வெரி விமானப்படை முகாமிலிருந்து சுமார் 10 விமானப்படையினர் வெளியே திவந்தபோது முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் வைத்து புலிகளின் அதிரடிக்கு இலக்காகினர் ஏனைய விமானப் படையினர்காயங்களுடன் தப்பியோடினர் புலிகள் தரப்பில்

... 04 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டமான் வரத்தடையில்லை

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமான் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வர விரும்பினால் அதற்கு எந்தத் தடையும் இல்லை என புலிகள் அறிவித்துள்ளதாக கொழும்புத் தினசரியான வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது.

## வன்னியில் முத்தமிழ் விழா அடுத்த மாதம் ஆரம்பிக்கும்

தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் எடுக்கும் முத்தமிழ் விழா ஜூலை மாதம் வன்னிப் பிராந்தியத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற உள்ளது 5, 6 ஆம் திகதி மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் அரங்கிலும், 9' 10 ஆம் திகதி முள்ளைத்தீவு புதுக்குடியிருப்பு மாவீரர் அரங்கிலும் 12. 13 14 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திலும் முத்தமிழ் விழா நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. 07

★ ஜனாதிபதி கூறியதாக மோதிலால் நேரு

# வருட இறுதிக்குள் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படும்

இவ் வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி ஆர் பிரேமதாஸ தனக்கு உறுதியளித்துள்ளதாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் துணைத் தலைவர், சட்டத்தரணி மோதிலால் நேரு தெரிவித்ததாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதனால் ஏற்படும் எந்த நெருக்கடியையும் தாம் சமாளிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறியதாகவும் தெரிவித்த அவர், இதன் காரணமாக சிங்கள இனவாத சக்திகள் அடுத்த தேர்தலில் தம்மைத் தோற்கடித்தாலும் அந்த நிலைமையை ஏற்றுக் கொண்டு மாபெரும் தேசியப் பிரச்சினை ஒன்றிற்குத் தீர்வு கண்ட திருப்தியில் வெளியேறிச் செல்வேன் என ஜனாதிபதி கூறியதாகவும் சொன்னார் என்றுமிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி கொலை முயற்சி மாகாண உறுப்பினர் விடுதலை

ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்யத் திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வடமத்திய மாகாணசபை உறுப்பினர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்,

இவருக்கெதிரான குற்றச்சாட்டு ஆதாரமற்றவை எனக் காணப்பட்டதாலேயே இவர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது

## ஹெலி நோட்டம்

ஆவரங்கால் புத்தூர் பகுதிகளை நேற்று காலை இரண்டு ஹெலிகள் பல தடவை சுற்றி நோட்டமிட்டு பறந்து சென்றன

ஹெலிகள் ஆனையிறவுக்கும் பலாலிக்கும் இடையே அடிக்கடி பறந்து திரிந்தன என்றும் சொல்லப்படுகிறது.

# கே. ஜி. பி. உதவியா? ஸ்ரீமாவோ மறுப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சோவியத்தின் புலனாய்வு நிறுவனமான கே ஜி பி நிதி உதவி அளித்ததான இந்தியப் பத்திரிகைச் செய்தியை கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மறுத்துள்ளார்.

இது முட்டாள் தனமான செய்தி எனவும் அவர் தெரிவித்தார் எனினும் அவரின்

— 04ஆம் பக்கம் பார்க்க

★ இராணுவத் தளபதி தகவல்

# பேச்சு நடந்தாலும் நடவடிக்கை தொடரும்

"எத்தனை சமாதானப் பேச்சுக்கள் நடந்தாலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடரும்'' என இராணுவத்தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ன தெரிவித்துள்ளார்.

படையினரின் நோக்கம் இராணுவ வெற்றி பெறுவதே வடக்கு கிழக்கில் அரச நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த படையினர் முயல்வர் எனவும் இராணுவ தளபதி கூறினார்.

★ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

# தெரிவுக்குழுவில் மீண்டும் சேர அரசு சலுகைகள் வழங்கியதாம்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பதான முடிவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைவிட்டமையின் பின்னணியில் அரசாங்கம் உள்ளதா எனும் கேள்வி தற்பொழுது எழுந்துள்ளது.

தெரிவுக்குழுவில் மீண்டும் அங்கம் வகிப்பதற்கு சுதந்திரக்கட்சி இணங்கியமைக்கு தமிழ்க் காங்கிரஸின் கோரிக்கைகாரணமல்ல; அக்கட்சிக்கு அரசு பல சலுகைகளை அளிக்க

...04ஆம் பக்கம் பார்க்க

## ராஜாளிய ஆசிரியரை தாக்கியவர் ராஜினாமா

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரால் வெளியிடப்படும் 'ராஜாளிய' பத்திரிகை ஆசிரியர் அக்கட்சியைச் சேர்ந்த ஒருவரால் தாக்கப்பட்டது தொடர்பாக கட்சிக்குள்ளேயே ஒழுங்கு விசாரணை நடத்தப்பட்டு ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என்றும் அவர் இராஜினாமாச் செய்துள்ளார் என்றும் கட்சியின் தலைவர் களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி பி பி சி க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

# அராலி கடலோரப்பகுதி நோக்கி கடற்படை பீரங்கி வேட்டு

ஊர்காவற்துறை அராலித்துறை கடற்பிராந்தியத்தில் தரித்து நிற்கும் கடற்படையினர் நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் தொடர்ச்சியாக யாழ் நகர் கரையோரப்பகுதி அராலி கடற்கரையோரப்பகுதி, வட்டுக்கோட்டைப் பகுதிகள் நோக்கி பீரங்கித்தாக்குதல்கள்மேற்கொண்டனர்.

பீரங்கிக் குண்டுகள் கரையோரப்பகுதிகளிலும் கடலிலும் வீழ்ந்து வெடித்தன படையினர்படகுகளிலிருந்தும் 50 கலிபர்த் தாக்குதல்களையும் மேற்கொண்டனர், 18

## நியமனப் பாடங்களை பயிலுநர் ஆசிரியர் மாற்றமுடியாது

பயிலுநர் ஆசிரியர்களாக குறிப்பிட்ட பாடங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அப்பாடங்களையே பாடசாலைகளில் கற்பிக்க வேண்டுமென்றும் வேறுபாடங்களை கற்பிக்க அனுமதிக்கக்கூடாது என்றும் கண்டிப்பான உத்தரவை கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் இப்பாடங்களை இவர்களுக்கு போதிக்கும் தொலைக் கல்வி ஆலோசகர்களுக்கும் அறிவித்துள்ளது

ஆனால் தொலைக் கல்வி ஆலோசகர்கள் யாழ் மாவட்டத்திலுள்ள பயிலுநர் ஆசிரியர்களை பாடசாலைகளில் சென்று பார்க்கும்போது

... 04ஆம் பக்கம் பார்க்க

# மீண்டும் இந்திய 'அக்னி'

## பாதுகாப்பு மந்திரி தகவல்

இந்தியாவின் அடுத்த "அக்னி ஏவுகணை வானிலை ஒத்துழைத்தால் அடுத்த இரு மாதங்களில் விண்ணில் செலுத்தப்பட்டு சோதனை செய்யப்படும் என்று இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

"நாட்டின் பாதுகாப்புக் கருதி இத்தகைய ஏவுகணைச் சோதனை நடத்துவது அவசியம்" என்று அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

கடந்த மாதம், முதல் அக்னி ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டது.

## மலேஷியாவில் 'யாழின் நரம்புகள்'

சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவை யொட்டி மலேஷியா கோலாலம்பூரில் "யாழின் நரம்புகள்" என்ற சிறப்பு நிகழ்வு நேற்று நடத்தப்பட்டது.

முழுநாள் நிகழ்ச்சியாக இது இடம்பெற்றது.

## விறுவிறுப்பான ஆட்டத்தை குழப்பிய வேட்டுகள்

15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான கல்லூரி கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சென்றல் கல்லூரிக்குமிடையிலான போட்டி சென்றல் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

போட்டி வெகு விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கையில் பிற்பகல் 3.30 மணியளவில் மண்டைதீவில் நிலை கொண்டுள்ள அரச படையினர் யாழ். நகரை நோக்கி 50 கலிபர் மற்றும் ஷெல்களை தீர்த்த வேட்டுகளுள் ஒரு சிலவை பாய்ந்து மைதானத்துக்குள்ளும் வந்து விழவே குழப்பமடைந்த வீரர்களும் ரசிகர்களும் நாலா பக்கமும் பாதுகாப்புத் தேடி ஓடினர். அத்துடன் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி 8 இலக்குகள் இழப்பிற்கு 186 ஓட்டங்களை எடுத்தது.

மத்திய கல்லூரி அதன் துடுப்பாட்டத்தில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. 16

## பங்குச் சந்தை ஊழல் வங்கி ஆளுநர் விளக்கம்

பங்குச்சந்தைஊழலைகண்டு பிடித்து வெளிப்படுத்தியதே இந்திய மத்திய வங்கிதான், அப்படியிருக்கையில் மத்திய வங்கிக்கு எதிராகவும் தமக்கு எதிராகவும் குற்றம் சாட்டப்படுவது ஆச்சரியமாக உள்ளதென இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் வெங்கட்ரமணன் லண்டனில் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் பாரிய குற்றத்தைக் கண்டுபிடித்த பொலிஸ்காரரையே குற்றவாளியாக்கி தண்டனை விதிப்பதற்குச் சமனாக இது உள்ளது என்றும் தெரிவித்தார்.

## ஹிந்தித் திணிப்பு புகார் அர்ஜுன்சிங் பதில்

எதிர்க்கட்சிகள் ஹிந்தி திணிக்கப்படுகிறது என்று வேண்டுமென்றே பழி சுமத்துவதாக மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் தமிழகத்தில் கூறியுள்ளார்.

கல்வியமைச்சர் இ. அரங்கநாயகத்தின் ஓர் கூற்றுப்பற்றி குறிப்பிட்ட அவர் ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டுகளைக் கூறினால் அவை விசாரிக்கப்படும் என்றார்.

## இடைவழியில் வைத்து திருப்பி அனுப்பப்படுகின்றன

ஐரோப்பியவெளிநாடுகளுக்கு ஏஜன்சிகளால் அனுப்பப்பட்ட சுமார் 50 பேர் அண்மையில் இடைவழியில் வைத்து திருப்பிஅனுப்பப்பட்டனர்.

இவர்கள் பாங்கொங்கில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை சிங்கப்பூர், பம்பாய் பகுதிகளிலும் பல இலங்கையர்கள் அப்பால் செல்ல முடியாது தங்கியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## தையல் பயிற்சி பாடசாலை

மட்டுவில் தெற்கு வேரற்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தையற் பயிற்சிப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி புதன் கிழமை இப்பயிற்சித் திட்டத்தை சாவகச்சேரி பிரதேச செயலர் திரு. க. சுந்தரம்பிள்ளை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கிறார். இதற்கான தையல் இயந்திரம் இப்பகுதிக்குரிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் முயற்சியால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## இரகசிய ஆவணம் தெரிவிக்கும் தகவல் இது

திருமதி சிறிமாவோவின் அதிகாரத்தை நிரப்பவுத் திக்கொள்ள கே.ஜி.பி. தொடர்ந்தும் தொடர்புகளைக் கொண்டிருக்கும் என்றும் அவரது அதிகாரத்தையும் கூட சோவியத் யூனியனின் நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் என்றும் முன்னாள் சோவியத் தலைவர் மிக்கெய்ல் கொர்பச்சேவுக்கு முன்னாள் கே.ஜி.பி. தலைவர் 1989 ஆம் வருடம் அனுப்பிவைத்துள்ள இரகசிய ஆவணம் ஒன்றில் தெரிவித்துள்ளார் என்று தகவல்வெளியிடப்பட்டுள்ளது.

## உலகத்தின் ஊடாக

### நியூயோர்க்

உலகிலேயே நியூயோர்க்கில் தான் அதிகம் 'ராக்ஸிகள்' இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இருந்து தெரிய வந்துள்ளது. மெக்ஸிக்கோ நகரில் மட்டும் 60 ஆயிரம் ராக்ஸிகள் உள்ளன. இவற்றுள் சாதாரண ராக்ஸிகள் ஏயர்போர்ட் ராக்ஸிகள் என்று இரண்டு வகை உண்டு. நியூயோர்க் நகரில் 11, 787 பதிவு செய்யப்பட்ட மஞ்சள் நிறமிகளைத காரிகள் உள்ளன என்றும், வாடகைக்கு எடுப்பவரே சொந்தக்காரர் போல் தானே ஓட்டிச் செல்லக் கூடிய கார்கள் 40 ஆயிரத்துக்கு மேல் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### இங்கிலாந்து

இங்கிலாந்தில் சுங்கான் மூலம் புகை பிடிப்பவர்களுக்கு என ஒரு சங்கம் இருக்கிறது. இச் சங்கம் ஆண்டு தோறும் போட்டிகளை வைத்து சிறந்த சுங்கான் புகை பிடிப்பவரைத் தேர்ந்தெடுத்து புகைபிடிப்பதில் இந்த வருடவல்லவர் (PIPE SMOKER OF THE YEAR) என்ற பட்டத்தை வழங்கி, அவருக்கு "பிக்பென்" கடிகார வடிவில் உள்ள ஒரு விசேட சுங்கானையும் வழங்குகிறது. கடந்த 28 ஆண்டுகளாக இந்தப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது: 1991 ஆம் ஆண்டு இந்தப் பரிசைப் பெற்றவர் 'டோனி பென்' என்ற இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்.

### அமெரிக்கா

ஜெட் விமானம் போல் வடிவம் கொண்ட ஸ்போட்ஸ் கார் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இது மணிக்கு 112 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடியது. இக்காருக்கு எரிபொருளும் அதிகம் தேவையில்லை. இதில் ஒருவர் பின் ஒருவராக இருவர் அமரலாம். பொதிகள் ஏற்றவும் பின்னுக்கு சிறிதளவு இடம் இருக்கிறது. மேலும் வேகமாகப் போகும் போது கவிழ்ந்து விடாமல் இருக்க இரண்டு பக்கமும் சிறு சக்கரங்கள் உண்டு. ஆனால் இதன் விலை 18 ஆயிரம் டொலர்கள் அதாவது இலங்கை நாணயப்படி 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்,

### இந்தியா

இந்தியாவில் "ஒரிசாவைச்" சேர்ந்த "ராஜகுமார் சக்கரவர்த்தி தொப்புக் கரணம் போடுவதில் புதிய சாதனை ஒன்றைப் படைத்து கின்னஸ் உலக சாதனை ஏட்டில் இடம் பிடித்துக் கொண்டார். இவர் இரண்டு மணி 45 நிமிடங்களில் 4200 தடவைகள் தொடர்ச்சியாக தொப்புக் கரணம் போட்டு சாதனையாளராகி விட்டார். (16)

போதைவஸ்து கடத்தல்

## கைதான இந்திய பிரஜை மலையகத் தொடர்பு எவ்வாறு?

போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டபோது கைதான இந்தியப் பிரஜை மலையகத்தில் கொண்டுள்ள தொடர்பு குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் 26 இலட்சம் ரூபா பெறுமதியான ஹீரோயின் போதை வஸ்துடன் பெருமாள் பால கிருஷ்ணன் (வயது 25) என்ற நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இப் போதைவஸ்தின் எடை இரண்டு கிலோ என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தாய்லாந்து மந்திரிசபை 25 பேர் இடம்பெறுகின்றனர்

தாய்லாந்து பிரதம மந்திரி 25 பேர் கொண்ட புதிய மந்திரிசபையை அறிவித்துள்ளார்.

இதில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் உட்படப் பல பழைய முகங்களே உள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## திருச்சியில் கூட்டம் பேரணிகளுக்குத் தடை

திருச்சி மாவட்டத்தில் நேற்று முதல் பதினைந்து தினங்களுக்கு ஒழுங்கு கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில அரசியற் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் நடத்த உத்தேசித்துள்ள கூட்டங்கள், பேரணிகள் போன்றவற்றால் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படலாம் என்பதற்காகவே இவ்வுத்தரவு எனத் தெரிவிக்கப்பட்டது.

தி.மு.கழகம் தமிழக விவசாயிகளுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த இலவச மின்சாரத்துக்குக் கட்டணம் அறவிடுவதென அ.தி.மு.க. அரசு முடிவுசெய்ததை எதிர்த்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியது தெரிந்ததே.

இதே வேளை பாட்டாளி மக்கள் கட்சி இன்று தாக்குதல் கயிறு 'இலைக்கயிறு' ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர்.

## முன்னேறும் முயற்சியாம்

யாழ் குடாநாட்டில் முன்னேறும் முயற்சிக்கு இராணுவம் தயாராகியுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்ததாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

## மேஜர் முரளி புதிர்ப்போட்டி

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர் 'மேஜர் முரளி' நினைவு நாளை முன்னிட்டு யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே "புதிர்ப் போட்டி" ஒன்றினை நடத்தவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 9 ஆம் ஆண்டிற்கு மேல் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கிடையே இப்போட்டி நடைபெறும். ஒரு பாடசாலையில் இருந்து 3 பேர் கொண்ட குழு ஒன்று மாத்திரம் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

இப்போட்டி பாடசாலை, கோட்டம், மாவட்டம் என்ற அடிப்படையில் நடைபெற்று மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் பாடசாலைக் குழுக்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. 18

## வலிவடக்கு நடவடிக்கையால் வெற்றிலைக்குத் தட்டுப்பாடு

அண்மையில் வலிவடக்கில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையையடுத்து வெற்றிலைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

வடபகுதிக்கான வெற்றிலை பெருமளவு தெல்லிப்பழைப் பகுதியிலேயே பயிர் செய்யப்பட்டு வந்தது.

இங்கிருந்தே வவுனியா வரை வெற்றிலை அனுப்பப்படுவது வழக்கம்.

குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ஒரு வெறு வெற்றிலை 2 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதை காணக்கூடியதாயிருந்தது. 23

## கிளிநொச்சி மாவட்டத்திலும் எழுதுவினைஞர் நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் எழுதுவினைஞர் தெரிவுக்காக அண்மையில் 350 பேர் பரீட்சைக்குத் தோற்றினார்.

முதல் கட்டமாக 77 பேர் நேர்முகப் பரீட்சைக்குஅழைக்கப்பட்டிருந்தனர். பல்வேறு திணைக்களங்களுக்கு இன்றி விருந்து நியமனம் வழங்கப்படும் என கிளிநொச்சி அரச செயலகத்தினூடாக அறிய வருகிறது

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றியவர்கள் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றலாகி வரவுள்ளனர், என்றும் தெரிவிக்கப்படுகிறது. (49)

## வெளியீடும் ஆய்வரங்கும்

"எமது உணவுத் தேவையும் உற்பத்தி இலக்குகளும்" நூல் வெளியீட்டு விழாவும், ஆய்வரங்குகளும் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

## திறப்பு விழா

இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் மறவன் புலோ சிவகிசனசமூக நிலையத்தில் இ. கணபதிப்பிள்ளை நூலகம் திறந்து வைக்கப்படும். 53

## அகதிகள் முகாமில் பாலர் பாடசாலை

கடற்புலிகளும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து பண்டத்தரிப்பு காடாபுலம் அகதிகள் முகாமில் நிறுவிய அன்னை சனசமூக நிலையத்தினதும் பாலர் பாடசாலையினதும் திறப்புவிழா அகதி முகாமின் பொறுப்பாளர் திரு.சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

கடற்புலிகளின் வலி வடக்குப் பிரதேச பொறுப்பாளர் திரு.மதன் பாலர் பாடசாலையையும், கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழி சனசமூக நிலையத்தையும் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தனர்.

பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் திரு.எம். இராசதுரை, திரு.அகத்தின் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (18)

## குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க புதிய திட்டம் அமுல்

யாழ். மாநகராட்சிப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கு முகமாகக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

'யூனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாநகர சபை இத்திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளது.

இராசாவின் தோட்டம், எழிலூர் ஆகிய பகுதிகளில் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (14)

## நிவாரணம் கிடைக்க சங்கம் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் தற்போதைய சூழ்நிலையால் தொழில் இழந்திருக்கும் மேசன்மார், உதவியாளர்கள், வர்ணம் பூசுபவர்கள், சீமெந்துத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட சீமெந்துத் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

இதுவரை 4500 சீமெந்துத் தொழிலாளர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளதாகவும் ஏனையோர் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஐயனார் கோவில் வீதியிலுள்ள சங்கப் பணிமனையில் தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றும் சங்கத் தலைவர் க.குகன் தெரிவித்துள்ளார். (14)

## உலகின் சிறந்த விளையாட்டு வீரராக லூயிஸ் தெரிவு

1991 ஆம் ஆண்டின் உலகின் அதிசிறந்த விளையாட்டு வீரராக கார்ல் லூயிஸைப் பிரெஞ்சு நாட்டுப் பத்திரிகைகளின் சம்மேளனம் தெரிவு செய்துள்ளது.

1990 ஆம் ஆண்டு உலக சாதனை படைத்த லூயிஸ், 1983 ஆம் ஆண்டு இறுதியில் நடந்த விளையாட்டுப் போட்டியிலும் சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

லூயிஸுக்கு அடுத்ததாக இரண்டாம் இடத்திற்கு நீளம் பாய்தலில் உலக சாதனை நிலைநாட்டியுள்ள "ஜம்ப்" வீரரான பவல் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 16

## எயர்லங்கா-இந்தியன் எயர்லைன்ஸ் விஸ்தரிப்பு

எயர்லங்காவும் இந்தியன் எயர்லைன்ஸும் இரு நாடுகளுக்கும் இடையிலான விமான சேவைகளை அதிகரிக்கவுள்ளன.

1991-1992 ஆம் நிதி வருடங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் 2 இலட்சத்து 84 ஆயிரத்து 190 பிரயாணிகள் பயணம் செய்தனர்.

இது முன்னைய வருடங்களைவிட 16.5 சதவீத அதிகரிப்பு எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு-திருச்சி, கொழும்பு - திருவனந்தபுரம் மார்க்கத்தில் கூடிய பயணிகளைக் கொண்டு செல்வது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

கொழும்பு-புதுடில்லி சேவை பற்றியும் இரு தரப்பினரும் ஆராய்ந்து வருகின்றனர்.

## பென்ஸ் காரும் அன்பளிப்பு

அமெரிக்க வானொலியான 'வொய்ஸ் ஒஃவ் அமெரிக்கா' சமீபத்தில் அதன் பொன்விழாவை விரிவான அடிப்படையில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. கொண்டாட்டம் தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு பல்வேறு விசேட நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது.

பொன்விழா நினைவாக தற்பொழுது இந் நிலையத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் விலை உயர்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன. சிலருக்கு 'பென்ஸ்' கார்கள் கூட அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இந்த நிறுவனத்துடன் நீண்ட காலம் சம்பந்தப்பட்டுக் கொண்டிருந்த கலைஞர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த நாபனம் மகிழ்ச்சியை, மகிழ்ச்சிக்குக் காரணமானவர்களுடன் பகிர்ந்து கொள்வதுதான் 'வி.ஓ.ஏ.' யின் பாணி என்று கூறியுள்ளது. (16)

## பெண் விமானமோட்டிகள்

இந்தியாவில் முதற் தடவையாக விமானப் படையில் பெண் விமானிகளைச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை இயக்குவதற்கு வெகுவிரைவில் பெண்கள் நியமிக்கப்படுவர் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

## சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு மற்றும் ஜனாதிபதி ஆகியோரிடம் ஏற்படும் அரசியல் மனமாற்றம்

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் காமினி ஜயசூரியா தலைமையிலான சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு ஒரு சிங்களப்பேரின [illegible] வாத அமைப்பு என்பது யாவரும் அறிந்ததே.

இலங்கைத் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையான வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட்ட தமிழ் மாநிலக் கோட்பாட்டை மிக வன்மையாக இவ்வமைப்பு எதிர்த்தது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வந்த பௌத்த பிக்குகள் குழு விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்த ஆலோசனைகளை பாதகமான முறையில் விமர்சித்தது. அதுமட்டுமல்ல இப்படியான சமாதானக் குழுக்கள் யாழ்ப்பாணம் வர அரசாங்கம் அனுமதிக்கக் கூடாதென்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கக் கூடாதென்றும் கூறியது.

1987 இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உடனடியாகப் பிரிக்கப்பட வேண்டும் எனவும், இணைப்பைத் தீர்மானிக்க கிழக்கில் மட்டும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவதைத் தாம் எதிர்ப்பதாகவும் இவ்வமைப்பு கூறியது.

மேலும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துவதாயின் முழு நாட்டிலுமே நடாத்தப்பட வேண்டும் என்றும் மாகாணசபைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் எதுவும் வழங்கக் கூடாது என்றும், பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு காணி மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பாக வழங்கப்பட்ட அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தால் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் வாதிட்டது.

இந்த அமைப்பு இம்மாதத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 1:4, 2:1 மற்றும் 2:2 ஆகிய பந்திகளின் படி இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்புப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவதைத் தவிர வேறு வழியில்லையென்று கூறுகின்றது.

சிறிலங்கா முழுவதிலும் அபிப்பிராய வாக்கெடுப்பு என்ற நிலையிலிருந்து கிழக்கில் வாக்கெடுப்பு என்ற நிலைக்கு இவ்வமைப்பு வந்துள்ளது.

### எஸ். ஜி. எம்.

இதைக் கூறிய இந்த அமைப்பு, அபிப்பிராய வாக்கெடுப்பு நிரந்தர இணைப்புக்கு சாதகமாக அமையுமெனில் அதிக அளவு அதிகாரம் பகிர்வு சாத்தியப்படாது எனக் கூறியுள்ளது.

இதற்கு மாறாக, இணைப்புக்கு எதிராக முடிவு அமைந்தால் முதலாவதாக தற்போதைய எல்லைகளின் படியே அமைந்த மாகாணசபைகளுக்கு அதிகளவு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம் எனவும் கூறியுள்ளது.

இரண்டாவதாக இதே அடிப்படையிலான ஓர் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தலாம் எனவும் கூறியுள்ளது. முதன்முறையாக இவ்வமைப்பு சமஷ்டித் தீர்வு பற்றிப் பேசியுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது. அதற்கான விதித்துள்ள நிபந்தனைகள் வேறு விஷயம்.

இது இவ்வாறு இருக்க இதுவரையில் தமது கருத்தை வெளிப்படையாகவும் தெளிவாகவும் கூறாது தவிர்த்து வந்த ஜனாதிபதி பிரேமதாஸ தாம் இந்த வருட முடிவுக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகக் கூறியுள்ளதாக கொழும்புத் 'தமிழ்க்கட்சி' ஒன்றின் 'பிரதித் தலைவர்' கூறியுள்ளார் எனப் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

மிகவும் சிக்கலான, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அதனால் தாம் அரசியலில் இருந்து விலகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் தாம் அதற்குத் தயார் என ஜனாதிபதி பிரேமதாஸ மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலந்தாலோசனை, கருத்தொற்றுமை, சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு எனப் பலவற்றின் பாரத்தைப் போட்டு வந்த ஜனாதிபதி, அரசுத் தலைவர், ஆட்சித் தலைவர், மற்றும் ஆளும் கட்சித் தலைவர் என்ற வகையில் தம்மீதுள்ள பொறுப்புக் கேற்ப செயற்படப் போவதாக அறிவித்துள்ளதாகவே இதைக் கருத வேண்டும்.

மேலே குறிப்பிட்ட இரண்டு சாராரின் கருத்துக்களும் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று சொல்லமுடியாது. தமிழர்களுக்கு சாதகமானது என்றும் சொல்லமுடியாது. அவற்றைக் காலம் தான் தீர்மானிக்கும். ஆனால் இரண்டு வெவ்வேறு திசைகளில் சிந்திப்பவர்களிடம் அரசியல் மனமாற்றம் ஏற்பட்டு வருவதையே இவை கோடி காட்டுகின்றன என்பதை குறிப்பிடலாம்.

## தெரிவுக் குழு தீர்வுத்திட்டம் தயாரிக்கும் - மங்களமுனசிங்க

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழு நியாயமானதொரு தீர்வுக்கு வர பிரதான கட்சிகளின் தீர்வுத் திட்டம் அவசியம் என்ற கூற்றைத் தம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதான கட்சிகள் தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிக்காதவரை தெரிவுக் குழுவின் முயற்சிகள் பலன்தராது என்று பரவலாக அபிப்பிராயப்படுவது பற்றி வினவிய போதே அவர் இவ்வாறு பதிலளித்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வட, கிழக்குப் பிரச்சினை தொடர்பான கோரிக்கைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. அக் கோரிக்கைகளை அடிப்படையாக வைத்துத் தீர்வுத் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பது குறித்து அவர் விளக்கிக் கூறினார்.

அநேகமாக இம் மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் தெரிவுக் குழு மீண்டும் கூடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தெரிவுக் குழு உறுப்பினர்களில் சிலர் வெளிநாடு சென்றிருப்பது தெரிவுக் குழுவைக் கூட்டுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்குக் காரணம் என்றும் அவர் சொன்னார்.

## விசேட நீதிமன்ற உத்தரவு

ஆயுதக் கடத்தலில் முக்கிய குற்றவாளியாகக் குமரன்பத்மநாபன் என்பவரது பெயர் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைமறைவான இவரைச் சரணடையுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இவரிடம் ஆறு கப்பல்கள் இருந்ததாகவும், காரைக்காலில் சமீபத்தில் பிடிபட்டது இதில் ஒன்றே என்றும் கூறப்படுகிறது.

வேலூர் அருகே பசற் பண்ணை என்ற பெயரில் இவர் ஆயுதக் கடத்தல் நிலையம் ஒன்றையும் நடத்திவந்தாராம்.

## அர்ஜூன்சிங்கிற்கு தமிழகத்தில் கறுப்புக் கொடி

மத்திய மனிதவளமேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கிற்குத் தமிழகத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த எழுவர் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் இவர்கள் கைதாகினர்.

காஞ்சிபுரத்திலும் இதே காரணத்துக்காக இக்கட்சியைச் சேர்ந்த நால்வர் கைதாகினர்.

## வெற்றி தோல்வி இன்றி முடிவு

கல்லூரிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் 17 வயதிற்கு உட்பட்டோர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நேற்று முன்தினம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி நேரம் போதாமையினால் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. 16

● அஜன்டா 21, றியோ பிரகடனம்

# இரு சாசனங்களும் அங்கீகரிக்கப்பட்டு உலக சூழல் மாநாடு நிறைவடைந்தது

பிறேசிலில் நடைபெற்ற உலக சூழல் மாநாடு நேற்றுடன் நிறைவடைந்தது. சூழல் தொடர்பாக வரலாற்றில் முதல் முறையாக நடைபெற்ற இந்த உச்சி மாநாட்டில் 100 நாடுகளின் அரசியல் தலைவர்கள் பங்குபற்றினர்.

மாநாட்டின் இறுதியில் அஜன்டா 21 எனும் உலக சூழல் சுத்திகரிப்பு தொடர்பான சாசனமும் றியோ பிரகடனம் எனும் சூழல் பாதுகாப்பு தொடர்பான சாசனமும் மாநாடு பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிறேசில் நகர் றியோடி ஜெனீரோவில் கடந்த 12 நாட்களாக நடைபெற்ற சூழல் மாநாட்டில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சூழல் பாதுகாப்பிற்கு தொழில்வள நாடுகள் நிதியுதவி வழங்கவேண்டும் என்ற கோரிக்கையே நீண்ட விவாதத்திற்கு உள்ளானது.

எனினும் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுகளில் தொழில்வள நாடுகள் தமது மொத்த தேசிய உற்பத்தியின் வருமானத்தில் நிதியுதவியை வழங்க ஒத்துக்கொண்டன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இந்த சூழல் பாதுகாப்பிற்கான நிதியுதவி 2000 ஆம் ஆண்டு முதல் பகிரப்படவேண்டும் என வலியுறுத்தினர். ஆனால் இதற்கு கால எல்லை நிர்ணயிப்பதை அபிவிருத்தியடைந்த நாடுகள் கடுமையாக ஆட்சேபித்தன.

கடந்த 12 நாள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இரு சாசனங்களில் 21 ஆம் நூற்றாண்டிற்கான அஜன்டா 21 எனும் சாசனத்தில் 115 பிரகடனங்கள் உள்ளன. இது 800 பக்கங்களைக் கொண்டது. இதேபோன்ற மற்றைய றியோ பிரகடனத்தில் சூழல் பாதுகாப்பு தொடர்பான 27 அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மொத்தத்தில் றியோ உலக சூழல் மாநாடு பெரும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாவிடினும் பூமியின் பாதுகாப்பு தொடர்பாக மனிதன் கொண்டுள்ள அக்கறையின் ஓர் திருப்புமுனையாக அமைந்துள்ளது.

● லலித் குற்றச்சாட்டு

## பிரேமாவின் ஆட்களே எமக்குள் கருத்து வேறுபாடு என்கின்றனர்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குள் தனிப்பட்ட வகையிலோ அரசியல் ரீதியிலோ தலைமைத்துவம் தொடர்பாகவோ கருத்து வேறுபாடு இல்லை அப்படி வேறுபாடு இருப்பதான கருத்து பிரேமதாச அவர்களின் ஆட்கள் உருவாக்கி விடுபவையாகும்

நானும் காமினி திசாநாயகவும், பிரேமச் சந்திரவும் எமக்குள்ளே கருத்து வேறுபாடு ஏற்பட இடமளிக்கவில்லை. எங்கள் நோக்கம் செழிவானது என்றும் அத்துலத் முதலி தெரிவித்தார்.

## கிராம ஆட்சி முறையை லலித் கட்சி ஏற்படுத்துமாம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனது கொள்கை விளக்க வெளியீட்டைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது என அதன் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி பி பி சிக்கு தெரிவித்துள்ளார்

இதில் பாராளுமன்ற ஜனநாயக முறையை ஏற்படுத்தல், திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கையை உலகில் ஏற்பட்டு வரும் பொருளாதார முறைகளுக்கமைய அமுல் செய்தல் என்பன உள்ளடக்கப்படும்

மேலும் உள்ளூராட்சி நிர்வாக முறையின் கீழ் பழைய கிராம ஆட்சி முறை மீண்டும் கொண்டுவரப்படும் என்றும் தமது ஆட்சியின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என தமக்கு நம்பிக்கையிருப்பதாகவும் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

## மயிலிட்டி காசநோய் ஆஸ்பத்திரி கைதடிக்கு மாற்றப்படலாம்

1990ஆம்ஆண்டுஜூன் மாதம் தொடக்கம் இன்று வரையில் இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்டிருக்கும் மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை பிறிதோர் இடத்தில் திறப்பது பற்றி சுகாதாரப் பிராந்திய மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாண்டுகளாக இவ் வைத்தியசாலை மூடப்பட்டிருப்பதனால் காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பல நோயாளர்கள் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது காசநோய் வைத்தியசாலையைத் திறப்பதற்கு கைதடிப் பகுதியில் உள்ள வயோதிபர்கள் தங்கும் இடப்பகுதியை தெரிந்தெடுத்துள்ளதாகத் தெரிகிறது

மயிலிட்டி வைத்தியசாலை மூடப்பட்டிருப்பது பற்றி சுகாதாரப் பிராந்தியப் பணிப்பாளர் அரசிடம் பல தடவை அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (07)

---

### விமானப்படைமீது ...

எந்தவித சேதமும் ஏற்படவில்லை

விமானப்படையினரிடமிருந்து ரி- 56 துப்பாக்கிகள் - 2

★ இதன் மகஸீன்கள் - 8
★ ரி - 81 துப்பாக்கிகள் - 2
★ மகஸீன்கள் - 12
★ ஐ. எம் ரவைகள் - 486
★ ஜே. ஆர், குண்டுகள் - 5
★ ரி. என் ரி குண்டுகள் 5
★ மற்றும் இராணுவ தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேலதிகப்படைகள் இப்பகுதிக்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### நியமனப் ...

குறிப்பிட்ட கோட்டக் கல்வி அதிகாரிகளினால் வேறு பாடங்களை போதிக்கவே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளனர். சில வகை பயிலுநர் ஆசிரியர்கள் தாம் நியமிக்கப்பட்ட பாடங்களைப் போதிக்கவே தகுதியற்றவர்களாக உள்ளனர் எனவும் இவ் ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவிக்கின்றனர். 15

### நூல்களுக்கு பரிசு

தரமான ஈழத்துத் தமிழ் இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்களுக்கு சாகித்திய மண்டலப் பரிசு போன்ற பரிசுகளை வழங்குவதற்கு யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் முடிவு செய்துள்ளது.

நூலாசிரியர்களும், வெளியீட்டாளர்களும் தமது நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள், கவிதை நூல்கள், இலக்கியம் மற்றும் பல்துறை நூல்களின் இரு பிரதிகளைப் பரிசீலனைக்காக அனுப்பி வைக்குமாறும் நூலாசிரியர்கள் இவ்விடயமாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் சமாசத் தலைவர் டானியல் அன்ரனி அறிவித்துள்ளார். 14

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 15-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

● யாழ். மாவட்டத்தில்

## விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்

பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் அரசிடம் இருந்து இதற்கான நிதி கோரப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த நிதி யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். 1

## கிளிநொச்சியில் இருந்து மடுவுக்கு மினிபஸ் சேவை

கிளிநொச்சியில் இருந்து மடுவுக்கு மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேபோல இங்கிருந்து முறிகண்டி, பூநகரி, பல்லவராயன்கட்டு, வலைப்பாடு, தருமபுரம், உருத்திரபுரம் இராமநாதபுரம் பகுதிகளுக்கும் மினிபஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன.

வேறு பகுதிகளுக்கும் இந்த சேவையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. 49

## உடுகம்பொல மாறுவேடத்தில் நடமாடுகிறாராம்

உடுகம்பொல மாறுவேடத்தில் நடமாடுகிறார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

உடுகம்பொலவை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிமன்ற உத்தரவுகள் விடுக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதனைப்படுத்தே அவர் மாறுவேடங்களில் நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## மேலும் பல அதிபர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

மேலும் பல பாடசாலை அதிபர்கள் மீது லஞ்சக்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை தெரிவிக்கிறது.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது பாடசாலை அபிவிருத்திக்கு என ஒரு தொகையை பெற்றோரிடமிருந்து இவர்கள் பெற்றதாக புகாரிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே சில அதிபர்கள் மீது இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்விப்பமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## யாழ். மத்திய கல்லூரியில்

யாழ். மத்திய கல்லூரியில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்குச் சகல மாணவர்களும் தேசிய உடையில் சமூகந்தரும்படி கோரப்பட்டுள்ளனர்.

## வயோதிபர்கள் விடுவிப்பு

கொல்லன்கலட்டி விழிசிட்டி பகுதிகளில் படையினரிடம் சிக்கிய காசிப்பிள்ளை கந்தையா ஆகிய இரு வயோதிபர்கள் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல வேறு மூன்று வயோதிபப்பெண்களும் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 22

## தேநீர்க்கடை தீக்கிரை

புத்தூர் நிலாவரைச் சந்திக்கருகில் தேநீர்க்கடையொன்று தீக்கிரையாகியுள்ளது.

பா. லோகேந்திரராசா என்பவருக்குச் சொந்தமான இக் கடையிலிருந்த தளபாடங்களும், உணவுப் பொருள்களும் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன. (43)

---

### தெரிவுக்குழுவில் ...

முன் வந்தமையே காரணம் எனக் கூறப்படுகிறது.

இதை சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் சிலரும் தனிப்பட்ட ரீதியில் ஒப்புக்கொள்கின்றனராம்.

எனினும் அரசு எத்தகைய சலுகைகளை சுதந்திரக்கட்சிக்கு வழங்கியதென்றோ அல்லது உண்மையில் அப்படி சலுகைகள் வழங்கப்பட்டதா என்பது ஊர்ஜிதமாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கே. ஜி. பி...

இந்த மறுப்பு செய்தி இந்தப் பத்திரிகைச் செய்தியை இலங்கையில் வெளியிட்ட லேக்ஹவுஸ் பத்திரிகைகள் ஏதும் நேற்று வரை வெளியிடவில்லை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கே ஜி. பி. நிதி உதவி அளித்ததாக இந்த பத்திரிகை வெளியிட்ட செய்தி நேற்று முரசொலியில் வெளிவந்தது தெரிந்ததே